www.StudyGuideIndia.com

**3576**

Register Number | | | | | |

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

*குறிப்பு :* i) **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அடக்க விலை அல்லது ........................ விலை, இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதி சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

2. முன்கூட்டிப் பெற்ற வருமானம் இருப்பு நிலைக் குறிப்பின் ........................ பக்கத்தில் தோன்றும்.

3. 31. 03. 2006 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ. 10,00,000. முதல் மீது 6% வட்டி காண்க ........................ .

4. ஒரு நிறுவனத்தின் பொறுப்புக்கள் ரூ. 15,000, முதல் ரூ. 45,000 எனில் அந்நிறுவனத்தின் சொத்துக்கள் ரூ. ........................ ஆகும்.

5. வெறுமையாதல் என்ற சொல் ........................ டன் தொடர்புடையது.

6. ........................ முறை பின்பற்றப்படாமல் பராமரிக்கப்படும் ஏடுகள் முழுமை பெறா பதிவேடுகள் எனப்படும்.

[ Turn over

www.StudyGuideIndia.com

7. நிலைச் சொத்தின் விற்பனை விலை ரூ. 1,30,000. விற்பனையின்பொழுது, சொத்தின் ஏட்டு மதிப்பு ரூ. 1,50,000 எனில் விற்பனையினால் ஏற்பட்ட நட்டம் ரூ. .................. .

8. வங்கி மேல் வரைப்பற்று ...................... பொறுப்புக்கு ஒரு உதாரணம்.

9. மொத்த விற்பனை ரூ. 2,00,000 ஆக உள்ளபோது ரொக்க விற்பனை ரூ. 65,000 எனில் கடன் விற்பனை ரூ. ...................... ஆகும்.

10. ரொக்கத் திட்டப் பட்டியல் ...................... என்றும் அழைக்கப்படுகிறது.

11. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ...................... அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்.

12. கூட்டாண்மையின் மிக முக்கிய சிறப்பியல்பு பரஸ்பர ...................... முகமை ஆகும்.

13. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும்பொழுது, அது ...................... இனமாகும்.

14. முதலினக் காப்பு என்பது ...................... இலாபத்தை குறிக்கின்றது.

15. ஒரு நிறுமத்தின் குறும ஒப்பமாக வெளியிடப்பட்ட முதலில் ......................% பெற்று இருக்க வேண்டும்.

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. இறுதி சரக்கிருப்பு தோன்றுவது

அ) இலாப நட்டக் கணக்கில்

ஆ) வியாபாரக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு

இ) இவையனைத்தும் இல்லை.

17. 31-12-2006 ஆம் நாளன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 2,00,000. வாராக் கடன் ரூ. 20,000 போக்கெழுதப்பட வேண்டும். மேலும் 20% வாரா ஐயக் கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. ...................... ஆகும்

அ) ரூ. 26,000

ஆ) ரூ. 36,000

இ) ரூ. 16,000.

www.StudyGuideIndia.com

18. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது

அ) வியாபாரக்கணக்கு

ஆ) இலாப அல்லது நட்ட அறிக்கை

இ) நிலை அறிக்கை.

19. 1-4-2005 அன்று கடனீந்தோர் ரூ. 2,42,000 ஆகும். 2006, மார்ச் 31, அன்று கடனீந்தோர் ரூ. 2,60,000. அவ்வாண்டில் கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ. 4,18,000 எனில், அவ்வாண்டின் கடன் கொள்முதல் ........................ ஆகும்.

அ) ரூ. 3,46,000

ஆ) ரூ. 4,63,000

இ) ரூ. 4,36,000.

20. நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடப்படுவது

அ) மொத்த அடக்க விலை மீது

ஆ) குறைந்து செல் மதிப்பு மீது

இ) அடக்க மதிப்பிலிருந்து இறுதி மதிப்பைக் கழித்த தொகை மீது.

21. ரூ. 20,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம்

அ) ரூ. 5,240

ஆ) ரூ. 5,420

இ) ரூ. 5,440.

22. நீர்மைப் பொறுப்புகள் என்பது

அ) நடப்புப் பொறுப்புகள்

ஆ) நடப்புப் பொறுப்புகள் - வங்கி மேல் வரைப் பற்று

இ) நடப்புப் பொறுப்புகள் + வங்கி மேல் வரைப் பற்று



www.StudyGuideIndia.com

23. அனைத்து வகையுடைமை விகிதங்களும் ............ ஆல் கொடுக்கப்படும்.

அ) விகிதாச்சாரம்

ஆ) மடங்கு

இ) சதவீதம்.

24. அறைகலன் வாங்கியது ............... எடுத்துக்காட்டாகும்.

அ) ரொக்கப் பெறுதல்கள்

ஆ) ரொக்கச் செலுத்தல்கள்

இ) இவையனைத்தும் இல்லை.

25. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு

அ) 1956

ஆ) 1932

இ) 1986.

26. குவிந்த நட்டங்களும், பகிர்ந்து தரா இலாபமும் பழைய கூட்டாளிகளின் கணக்கிற்கு

அ) மாற்றப்படும்

ஆ) மாற்றப்படக் கூடாது

இ) இவை ஏதுமில்லை.

27. கூட்டாளிகளிடையே குறிப்பிட்ட ஒப்பந்தம் ஏதும் இல்லாதபொழுது, கூட்டாளிகளின் கடன்மீது ............... சதவீதம் வட்டி வழங்கப்படும்.

அ) 6%

ஆ) 10%

இ) 12%.

28. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும்போது அந்நிறுமத்தின் பங்கு முதல் .............. .

அ) அதே நிலையில் இருக்கும்

ஆ) குறையும்

இ) அதிகரிக்கும்.

www.StudyGuideIndia.com

29. இருப்பு நிலைக்குறிப்பில் முதலினக் காப்பு ............. பக்கம் தோன்றும்.

அ) சொத்துக்கள்

ஆ) பொறுப்புகள்

இ) இரண்டும்.

30. ஒரு நிறுமத்தின் பங்கு வெளியீட்டு விலை முகமதிப்பிற்கு அதிகமாக இருக்குமேயானால் அதனை ............... வெளியீடு என்று அழைக்கலாம்.

அ) முகமதிப்பு

ஆ) முனைமத்தில்

இ) வட்டத்தில்.

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : $10 \times 5 = 50$ )

*குறிப்பு :* i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன.

iii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. கொடுபடவேண்டிய செலவு என்றால் என்ன ?

32. ஒற்றை பதிவுமுறையின் குறைபாடுகள் யாவை ?

33. எறி மதிப்பு என்றால் என்ன ?

34. நடப்புச் சொத்துக்கள் யாவை ?

35. ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து உதாரணம் தருக.

36. உள்வரு கூட்டாளி என்பவர் யார் ?

www.StudyGuideIndia.com

37. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன ?

38. 31.03.2007 அன்றைய இருப்பாய்வின்படி வாடகை பெற்றது ரூ. 30,000. முன் கூட்டிப் பெற்ற வாடகை ரூ. 6,000. சரிக்கட்டுப் பதிவு தருக.

39. விடுபட்ட தகவலைக் காண்க :

| | ரூ. |
|---|---|
| இறுதி முதல் | 1,63,800 |
| கூடுதல் முதல் | 42,300 |
| எடுப்பு | 25,200 |
| நட்டம் | 12,600 |
| தொடக்க முதல் ரூ. | ..........? |

40. ஒரு நிறுமம் ரூ. 1,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதனை நிறுவுவதற்காக ரூ. 10,000 செலவழித்தது. அந்த இயந்திரத்தின் பயனளிப்புக் காலம் 5 ஆண்டுகள் ஆகும். அதன் இறுதி மதிப்பு ரூ. 5,000 ஆகும். நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையையும், தேய்மான விகிதத்தையும் கண்டுபிடிக்கவும்.

41. பின்வருவனவற்றிலிருந்து சரக்கிருப்பு விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 40,000 |
| இறுதி சரக்கிருப்பு | 30,000 |
| கொள்முதல் | 95,000 |

42. சுரேந்திரா, அம்ரித் எனும் இரு கூட்டாளிகள் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். சுரேந்திரா ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியில் ரூ. 2,000 எடுத்துக் கொள்கிறார். அம்ரித் என்பவர் ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ரூ. 4,000 எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10% எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

www.StudyGuideIndia.com

43. பின்வரும் விபரங்களில் இருந்து ஜூன் 2005க்கான ரொக்க திட்டப்பட்டியலை தயாரிக்க :

| விபரம் | தொகை ரூ. |
|---|---|
| கையில் ரொக்கம் 1-06-2005 | 10,000 |
| ஜூன் 2005 இல் ரொக்கக் கொள்முதல் | 70,000 |
| ஜூன் 2005 இல் ரொக்க விற்பனை | 1,00,000 |
| ஜூன் 2005 இல் அறைகலன் வாங்கியது | 2,500 |

44. லதா லிமிடெட் ரூ. 10 வீதம் 2,00,000 நேர்மைப் பங்குகளை 10% தள்ளுபடியில், வட்டத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டு பதிவினைத் தருக.

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

*குறிப்பு :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் **45**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

iii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31-12-2006 அன்று இருப்புநிலைக் குறிப்பில் உள்ள கடனாளிகள் ரூ. 10,500

*சரிக்கட்டுதல்கள் :*

i) வாராக் கடன் போக்கெழுதுக ரூ. 500.

ii) பற்பல கடனாளிகள் மீது வாரா ஐயக்கடன் ஒதுக்குக 5% வீதம்

iii) கடனாளிகள் மீதான வட்டி ஒதுக்கீடு 2% வீதம் உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

*அல்லது*



www.StudyGuideIndia.com

ஆ) பாலா தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறார். கீழ்க்கண்ட விவரங்கள் தருகிறார்.

| விவரங்கள் | 2006, ஜனவரி 1 | 2006, டிசம்பர் 31 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கையிருப்பு ரொக்கம் | 2,000 | 3,000 |
| வங்கியிருப்பு ரொக்கம் | 1,000 | 2,000 |
| சரக்கிருப்பு | 16,000 | 18,000 |
| அறைகலன் | 3,000 | 5,000 |
| பற்பல கடனாளிகள் | 21,000 | 30,000 |
| கடனீந்தோர் | 5,000 | 7,000 |

தொழிலிலிருந்து எடுப்பாக ரூ. 4,000 ஐ தனது சொந்த செலவிற்காக எடுத்துக் கொண்டார். 2006 ம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடுக.

46. கீழ்வரும் தேய்மானம் கணக்கிடும் முறைகள் பற்றி குறிப்பு வரைக :

அ) ஆண்டுத் தொகை முறை

ஆ) தேய்மான நிதி முறை

இ) காப்புறுதி பத்திரமுறை.

47. திட்டப்பட்டியலுக்கு இலக்கணம் தருக. திட்டப்பட்டியலுக்கான தன்மைகள் யாவை ? ரொக்கத் திட்டப் பட்டியலின் நன்மைகள் யாவை ?

48. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக. கூட்டாண்மையின் சிறப்பியல்புகள் யாவை ?

49. நிவேதிதா தயாரிப்பு நிறுவனம் 1-4-2006 அன்று ரூ. 2,90,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதை நிறுவுதற்கான செலவு ரூ. 10,000. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ. 2,00,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 15% வீதம் தேய்மானம் நிலைத் தவணை முறையில் நீக்கப்பட வேண்டும்.

கணக்காண்டு மார்ச் 31ம் நாளோடு முடிவதாகக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு குறிப்பேட்டு பதிவுகள், இயந்திரக் கணக்கு ஆகியவற்றை தயார் செய்க.

www.StudyGuideIndia.com

50. திவ்யா, ஸ்வேதா என்ற கூட்டாளிகள் 5 : 3 எனும் விகிதத்தில் இலாபம் நட்டம் பகிர்ந்து வந்தனர். பவித்ரா என்பவரை அக் கூட்டாண்மையில் சேர்த்துக் கொள்வதை முன்னிட்டு, அவர்கள் அவர்களது சொத்துக்களையும், பொறுப்புக்களையும் பின் வருமாறு மறு மதிப்பீடு செய்ய முடிவு செய்தனர்.

அ) நிலம், கட்டிட மதிப்பை ரூ. 30,000 அதிகப்படுத்த வேண்டும்.

ஆ) இயந்திர மதிப்பை ரூ. 8,000, அறைகலன் மதிப்பை ரூ. 2,000, சரக்கிருப்பு மதிப்பை ரூ. 6,000ம் குறைக்க வேண்டும்.

இ) கொடுபடாமலுள்ள பொறுப்புகள் ரூ. 400க்கு வகை செய்ய வேண்டும்.

இவற்றை செயல்படுத்துவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறுமதிப்பீட்டு கணக்கு தருக.

51. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக :

i) மொத்த இலாப விகிதம்

ii) நிகர இலாப விகிதம்

iii) நடப்பு விகிதம்.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 3,00,000 |
| நிகர இலாபம் | 30,000 |
| நடப்பு பொறுப்புகள் | 30,000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 2,40,000 |
| நடப்பு சொத்துகள் | 60,000 |

52. ஆச்சார்யா லிமிடெட் 300 பங்குகளை, பங்கொன்றுக்கு ரூ. 10 வீதம் (முழுவதும் அழைக்கப்பட்டவை) வைத்திருந்த குமார் என்பவர், முதலாவது அழைப்புத் தொகையான பங்கு ஒன்றிற்கு ரூ. 3 ம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான பங்கொன்றிற்கு ரூ. 4ம் செலுத்தத் தவறியதால், பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில், 250 பங்குகள் இளங்கோவன் என்பவருக்கு ரூ. 2,000 த்திற்கு மறுவெளியீடு செய்யப்பட்டது.

பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டுக்கான குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.



www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

*குறிப்பு :* i) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றுள் **53** வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

53. அ) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2006, மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| விவரங்கள் | 1-4-2005 ரூ. | 31-03-2006 ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

*மற்ற விவரங்கள் :*

| | ரூ. |
|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| பல்வகைச் செலவுகள் | 15,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 |
| எடுப்புகள் | 20,000 |
| விற்பனை திருப்பம் | 7,500 |
| கொள்முதல் திருப்பம் | 2,500 |

அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்குக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) சிவா, பன்னீர் எனும் கூட்டாளிகள் 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வருகின்றனர்.

2006, மார்ச் 31ம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | வங்கி | 10,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 28,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| வங்கி மேல் வரைப் பற்று | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| பொதுக் காப்பு | 30,000 | இயந்திரம் | 40,000 |
| முதல் கணக்குகள் | | நிலம், கட்டடம் | 70,000 |
| சிவா 40,000 | | இலாப நட்டக் கணக்கு | 8,000 |
| பன்னீர் 30,000 | 70,000 | | |
| | 1,78,000 | | 1,78,000 |

1-4-2006 அன்று அவர்கள் கீழ்வரும் பகிர்வுகளில் கோபிநாத் என்பவரைக் கூட்டாண்மையில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்தனர்.

i) கோபிநாத் என்பவர் ரூ. 30,000 முதல் கொண்டு வருவது

ii) ஏடுகளில் நற்பெயரை அதன் நடப்பு மதிப்பாகிய ரூ. 20,000 எனத் தோற்றுவிப்பது

iii) நிலம் - கட்டடத்தை 10% மதிப்பேற்றம் செய்வது

iv) சரக்கிருப்பு மதிப்பை ரூ. 3,000, கொடுபடாப் பொறுப்பு ரூ. 2,000க்கு ஒதுக்கொன்று உருவாக்குவது.

இவற்றைச் செயல்படுத்துவதற்குரிய குறிப்பேட்டு பதிவுகள் தருக. மேலும் மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைக் காட்டுக.

[ Turn over

www.StudyGuideIndia.com

54. திரு. ஆனந்த் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்பாய்வு 31-03-2005 அன்றுள்ளபடி பின் வருமாறு :

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| முதல் | | 20,000 |
| எடுப்புகள் | 4,000 | |
| வங்கிவச ரொக்கம் | 1,700 | |
| விற்பனை | | 16,000 |
| கைவச ரொக்கம் | 6,500 | |
| கூலி | 1,000 | |
| கொள்முதல் | 2,000 | |
| தொடக்க சரக்கிருப்பு (1-4-2004) | 6,000 | |
| பற்பல கடனீந்தோர் | | 4,500 |
| கட்டடங்கள் | 10,000 | |
| பற்பல கடனாளிகள் | 4,400 | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,900 | |
| வாடகை | 450 | |
| கழிவு | 250 | |
| பொதுச் செலவுகள் | 800 | |
| அறைகலன் | 500 | |
| | 40,500 | 40,500 |

www.StudyGuideIndia.com

செய்ய வேண்டிய சரிகட்டுதல்கள் :

i) இறுதி சரக்கிருப்பு ரூ. 4,000

ii) முதல் மீதான வட்டி 6% வீதம் அனுமதிக்க

iii) எடுப்புகள் மீதான வட்டி 5% வீதம் அனுமதிக்க

iv) கொடுபட வேண்டிய கூலி ரூ. 100

v) முன்கூட்டி செலுத்திய வாடகை ரூ. 50

மேற்கூறிய நபரின் ஏடுகளில் 31-03-2005ம் நாளோடு முடிவுறும் ஆண்டுக்குரிய வியாபார கணக்கு, இலாபநட்டக் கணக்கினையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பினையும் தயாரிக்க.

55. பின்வருவனவற்றைக் கொண்டு இயக்க இலாப விகிதம், இயக்க விகிதம், மொத்த இலாப விகிதம், நிகர இலாப விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| விற்பனை | 1,00,000 | பங்காதாயம் பெற்றது | 400 |
| மொத்த இலாபம் | 30,000 | நிகர இலாபம் | 26,600 |
| நிர்வாகச் செலவுகள் | 1,000 | | |
| விற்பனைச் செலவுகள் | 2,000 | | |
| முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட நட்டம் | 800 | | |



www.StudyGuideIndia.com

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2006, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ரொக்கத் திட்டப் பட்டியலை தயாரிக்க :

| மாதம் | கடன் கொள்முதல் ரூ. | கடன் விற்பனை ரூ. | நிர்வாக மற்றும் விற்பனைச் செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 75,000 | 1,50,000 | 1,20,000 |
| பிப்ரவரி | 1,00,000 | 1,35,000 | 1,35,000 |
| மார்ச் | 85,000 | 1,75,000 | 65,000 |
| ஏப்ரல் | 1,25,000 | 1,20,000 | 70,000 |
| மே | 90,000 | 1,40,000 | 80,000 |

கூடுதல் தகவல்கள் :

i) 01.03.2006-ல் எதிர்நோக்கும் ரொக்க இருப்பு ரூ. 80,000

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iv) செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்

v) ஏப்ரலில் ரூ. 25,000 க்கு நிலைச் சொத்து விற்கப்பட்டது

vi) மே மாதம் வாங்கப்பட்ட நிலைச் சொத்து ரூ. 25,000.

www.StudyGuideIndia.com

57. நாகேஷ் வரையறு நிறுமம் 6000 பத்து ரூபாய் பங்குகளைப் பங்கொன்றிற்கு ரூபாய் இரண்டு முனைமத்தில் வெளியிட்டது. செலுத்த வேண்டிய தொகை பின் வருமாறு :

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ரூ. 2 |
| ஒதுக்கீட்டின்போது | ரூ. 5 ( முனைமத்துடன் ) |
| முதலாவது அழைப்பின் போது | ரூ. 3 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 2 |

எல்லாப் பங்குகளும் ஒப்பீடு செய்யப்பட்டு, முழுப்பணம் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, பேரேட்டுக் கணக்குகளும் மற்றும் இருப்புநிலைக் குறிப்பையும் காட்டுக.

www.StudyGuideIndia.com